(இ) அவர்களிடமிருந்து முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

(உ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) சோமனூர் பகுதியிலுள்ள விசைத் தறி நெசவாளர்கள் 29—11—1973 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

(இ) கூலி உயர்வு மற்றும் இதர கோரிக்கைகளை தொழிலாளர்கள் எழுப்பினர்.

(உ) வருவாய்த்துறை அமைச்சர், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் முன்னிலையில் 11—12—1973-ல் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. திருப்பூர் பகுதியில் தொழில் தகராறுகள் சட்டம் 18(1) பிரிவின் கீழ் 6—10—1973-ல் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி கூலிகளை அளிக்குமாறு நிர்வாகத்தினர்களுக்கு வருவாய்த்துறை அமைச்சர் ஆலோசனை கூறினார். இக் கருத்துரையை நிர்வாகத்தினர் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனை அடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில் நடந்த பேச்சுகளின் பலனாக தற் காலிக உடன்பாடு ஏற்பட்டு தொழிலாளர்கள் 27—12—1973 முதல் வேலைக்குத் திரும்பினர். கூலியை குறித்து பிறகு விவாதிக்கலாம் என ஒப்புக் கொள்ளப் பட்டது.

திரு. வி. வெங்கா: தலைவரவர்களே, விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கக் கூடிய கூலியாட்களுக்கு குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்திருக்கிறோம். அதே மாதிரி நெசவுத் தொழிலில் இருப்பவர்களுக்குக் குறைந்தபட்சக் கூலியை அரசு நிர்ணயம் செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இந்தக் குறைந்த பட்சக் கூலியை நிர்ணயிக்கக் குழு போடுவது அரசின் ஆலோசனையில் இருக் கிறது. ஆனால் இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், இது பவர் லூம் வீவர்ஸ் பிரச்சினை. அதில் கூலித் தகராறு மட்டுமல்லாமல், வேறு பிரச்சினைகளும் இருக்கின்றன.

Membership Fee to the Trade Unions from the Workers

* 259 *Q.*—Pulavur O. Arivudai Nambi (on behalf of THIRU KATTOOR GOPAL): Will the Hon. the Minister for Labour be pleased to state with reference to the answer to question No. 57 on 22nd November 1973:

(a) whether any representation has been received by the Government requesting amendment of the Payment of Wages

Act to facilitate deduction of the Membership Fee to the Trade Union from the wages of the workers, as agreed to by the Industrial Management and the workers; and

(b) if so, the action taken thereon?

தொழிற்சங்கங்களுக்குத் தொழிலாளர்கள் செலுத்த வேண்டிய உறுப்பினர் கட்டணம்.

புலவர் ஓ. அறிவுடை நம்பி (திரு. காட்டூர் கோபால் சார்பில்): மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற மேலவையில் 22—11—1973-ஆம் நாளன்று, வினா எண் 57-க்கு அளித்த விடையினையொட்டி, கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தொழிற்சாலை நிர்வாகத்தினரும், தொழிலாளர்களும் ஒப்புக்கொண்டு, தொழிலாளர்களது சம்பளத்தில் இருந்து தொழிற்சங்கங்களுக்குச் செலுத்த வேண்டிய உறுப்பினர் கட்டணத்தைப் பிடித்தம் செய்ய தற்போதுள்ள சம்பளப் பட்டுவாடாச் சட்டத்தின் விதிமுறைகளின் மாற்றத்திற்கு வகை செய்ய வேண்டுமென்று, அரசுக்கு ஏதேனும் முறையீடு வரப்பெற்றுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) 9—7—1968-ஆம் நாள் நடைபெற்ற மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனை வாரியத்தின் 16-வது கூட்டத்தில், தொழிற்சங்கங்களுக்குத் தொழிலாளர்கள் செலுத்தவேண்டிய சந்தாத் தொகைகளை அவர்களது ஊதியங்களிலிருந்து பிடித்து, சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களுக்கு அத்தொகைகளை அனுப்பிவைப்பதற்கு 1936-ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தைத் (மத்தியச் சட்டம் 4/1936) திருத்த வேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. தொழிற்சங்க சந்தாத் தொகைகளை தொழிலாளர்களது ஊதியங்களிலிருந்து பிடித்தம் செய்வதற்கு வழிவகை செய்யும் முறையில் 1936-ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் 7(2) பிரிவைத் திருத்துவதற்காக சட்டத்தைத் தகுந்தவாறு திருத்த இந்திய அரசினைக் கோரி 2—1—1970-ல் தமிழ்நாடு அரசு எழுதியுள்ளது. இந்திய அரசும் இப்பொருள் குறித்து தக்க சட்டவரைவு ஒன்றை விரைவில் நாடாளுமன்றத்தில் கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தனது 22—12—1972 ஆம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளது.